நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : இடைநிலை – கீழ்ப்பிரிவு

## Level : Intermediate - Lower

***June 2012***

வினாக்கள் : 50

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

உங்கள் பதில்களைத் தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.

**வினாக்கள்: 1-5**

**கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து உரைப்பகுதியைப் பூரணப்படுத்துக.**

**Choose the most suitable word(s) for the underlined space to complete the paragraph.**

**ஆழிப்பேரலை (Tsunami)**



கடலில் தோன்றும் மிகவும் நீளமான தொடர் அலைகளின் தாக்கம் (1) ________________ எனப்படும். பொதுவாக இந்த அலைகள் பெரிதாகவும் செங்குத்தாகவும் உருவாவதால் (2) ______________________ நிலப் பகுதிக்கு பெரும் அளவிலான நீர் தள்ளப்படுகின்றது. கடலுக்குக் கீழ் அல்லது கடலை அண்மித்த பகுதிகளில் ஏற்படும் (3)_________________ காரணமாக ஆழிப்பேரலை உருவாகின்றது. இந்த (4) ________________________________ கடலோரப் பகுதியில் வாழும் மக்களுக்கும் அவர்கள் உடமைகளுக்கும் மிகப்பெரும் (5)________________________ ஏற்படுத்துகிறது.

(a) நில அதிர்வு
(b) அழிவை
(c) ஆழிப்பேரலை
(d) தாழ்ந்த

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்தில் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 6 – 10, choose the correct word for the underlined space to complete the statements.**

6. திருவள்ளுவர் திருக்குறளை ______________________________ .

   (a) இயற்றப்பட்டது
   (b) இயற்றினார்
   (c) இயற்றியது
   (d) இயற்றவில்லை

7. கங்காருவின் வால் மிகவும் ______________________________ .

   (a) வலிமையானவை
   (b) வட்டமானவை
   (c) வலிமையானது
   (d) எளிமையானது

8. கடந்த வருட கலைவிழா சிறப்பாக ______________________________ .

   (a) நடைபெறும்
   (b) நடைபெறுகிறது
   (c) நடக்கிறது
   (d) நடைபெற்றது

9. பிரதம விருந்தினர் பரிசில்களை ______________________________ .

   (a) வழங்கினார்
   (b) வலங்கினார்
   (c) வளங்கினார்
   (d) வழங்கப்பட்டது

10. வேடனின் மனைவி ______________________________ .

   (a) குறத்தி
   (b) வேட்டுவிச்சி
   (c) வேதி
   (d) கள்ளி

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் கோடிட்ட சொல்லிற்கான எதிர்ச் சொல்லை தெரிவு செய்க.**

**For questions 11 – 15 choose the correct word that is opposite in meaning to the underlined word.**

11. நீதிபதி <u>நீதி</u> வழங்கினார்.

    (a) தீர்ப்பு
    (b) அநீதி
    (c) பதில்
    (d) விடை

12. உழைப்பவன் <u>உயர்வு</u> அடைவான்.

    (a) தாழ்வு
    (b) மேன்மை
    (c) கொடுமை
    (d) தீமை

13. பசுவைக் கண்ட கன்று <u>மகிழ்ச்சியில்</u> துள்ளியது.

    (a) சந்தோஷத்தில்
    (b) வியப்பில்
    (c) கவலையில்
    (d) பெருமிதத்தில்

14. நிகழ்ச்சி <u>முடிவில்</u> சபையோர் கரகோசம் செய்தனர்.

    (a) இடையில்
    (b) பாதியில்
    (c) தொடக்கத்தில்
    (d) இறுதியில்

15. எமது தமிழ் மொழி <u>பழமை</u> வாய்ந்தது.

    (a) இரசனை
    (b) இனிமை
    (c) அழகு
    (d) புதுமை

அடுத்த பக்கத்தில் தொடரும்.

பின்வரும் பந்தியை வாசித்து 16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**Read the text below and answer the questions 16 – 20**

### தொண்டுகள்

கைம்மாறு எதையும் எதிர்பாராது செய்யும் பணி தொண்டு எனப்படும். தொண்டு செய்பவர் பிறரிடம் எதையும் எதிர்பார்த்தலாகாது. நாம் மற்றவர்களுக்குத் தொண்டு செய்தால் இறைவன் எமக்குத் துணை செய்வார். நாம் தொண்டுகளை விருப்புடன் செய்தல் வேண்டும். அதனால் எமக்கு மன நிறைவு ஏற்படும். ஏழைகளுக்கு உதவுதல், வயோதிபரைப் பேணுதல், நோயாளருக்கு உதவுதல், பொதுச் சொத்துக்களைப் பேணுதல் என்பவை சமூகத்தில் செய்யக்கூடிய தொண்டுகளாகும். இவற்றை விட எல்லோரிடமும் அன்பாக இருத்தல், பண்பாகப் பேசுதல், யாவரையும் மதித்தல், விட்டுக் கொடுத்தல், ஒற்றுமையாக வாழ்தல், உயிர்கள் மீது கருணை காட்டுதல் என்பவையும் நாம் செய்யக்கூடிய சிறந்த தொண்டுகள் ஆகும்.

16. தொண்டு செய்பவர் எவ்வாறு இருக்க வேண்டும்?

(a) மற்றவர்களிடம் ஏதாயினும் கேட்கவேண்டும்.
(b) மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்கக் கூடாது.
(c) ஒருவரையும் மதிக்கக் கூடாது.
(d) ஏழைகளுக்கு தொண்டு செய்யக் கூடாது.

17. நாம் சமூகத்தில் செய்யக்கூடிய தொண்டுகள்.

(a) ஏழைகளுக்கு உதவுதல்.
(b) வயோதிபரை பேணுதல்.
(c) நோயாளருக்கு உதவுதல்.
(d) இவை எல்லாம் சரி.

18. நாம் தொண்டுகள் செய்யும் போது

(a) விருப்பம் இல்லாமல் செய்ய வேண்டும்.
(b) சந்தோஷத்துடன் செய்யவேண்டும்.
(c) கோபத்துடன் செய்யவேண்டும்.
(d) மற்றவர்களுக்கு சொல்லாமல் செய்யவேண்டும்.

19. உயிர்கள் மீது கருணை காட்டுதல் என்பது

(a) துன்புறுத்தல்.
(b) அடித்தல்.
(c) இரக்கம் காட்டுதல்.
(d) கோபப்படுதல்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

20. நாம் தொண்டு செய்யும் போது

(a) வருத்தம் ஏற்படும்.
(b) மனநிறைவு ஏற்படும்.
(c) குழப்பம் ஏற்படும்.
(d) பயம் ஏற்படும்.

**21 முதல் 25 வரையுள்ள வசனங்களில் கோடிட்ட சொல்லிற்கு ஒருமை சொல்லைத் தெரிவு செய்க.**

**For question 21 to 25 choose the correct word that is singular to the underlined word in the sentences.**

21. <u>மாணவர்கள்</u> வரிசையாக நின்றார்கள்.

(a) சிறுவர்கள்
(b) மாணவன்
(c) சிறுமிகள்
(d) பிள்ளைகள்

22. தமிழ் மொழியில் 247 <u>எழுத்துகள்</u> உள்ளன.

(a) எண்
(b) சொல்
(c) எழுத்து
(d) சொற்கள்

23. <u>அவர்கள்</u> பாடினார்கள்.

(a) அவன்
(b) அவைகள்
(c) அது
(d) அவை

24. புறாக்கள் <u>தூங்கின.</u>

(a) தூங்கியது
(b) தூங்கும்
(c) தூங்குகின்றது
(d) தூங்குபவை

25. <u>**எவை**</u> உனது புத்தகங்கள்?

(a) யாவை
(b) அவை
(c) எது
(d) எவர்

**26 முதல் 28 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.**

## Combine the given words for the questions 26 to 28.

26. ஐந்து + பத்து

(a) ஐந்துபத்து
(b) ஐம்பது
(c) ஐம்பந்து
(d) ஐந்துபத்துகள்

27. கடல் + கரை

(a) கடற்கரை
(b) கடக்கரை
(c) கடல்கரை
(d) கடர்கரை

28. முள் + செடி

(a) முள்செடி
(b) முட்செடி
(c) முச்செடி
(d) முள்ளுசெடி

**29 தொடக்கம் 32 வரையுள்ள வசனங்களில் உள்ள இடைவெளிக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

## For questions 29 to 32 choose the most appropriate word for the underlined space to complete the statements.

29. கோழிக்குக் குஞ்சு போல் சிங்கத்திற்கு ______________________________ .

(a) குஞ்சு
(b) பிள்ளை
(c) குட்டி
(d) கன்று

30. குயில் கூவும், மயில் ______________________________ .

(a) பாடும்
(b) கத்தும்
(c) உறுமும்
(d) அகவும்

31. கடிதம் கொடுப்பவர் ______________________________ .

(a) ஆசிரியர்
(b) காவலர்
(c) நடிகர்
(d) தபால்காரர்

32. கட கட வென்று தேர் ஓடியது ______________________________ மணம் வீசியது.

(a) கணீர் கணீரென்று
(b) கிசு கிசுவென்று
(c) கம கமவென்று
(d) கலீர் கலீரென்று

**33 முதல் 35 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**For questions 33 to 35 choose the most appropriate answer.**

33. "திருக்குறளை" இயற்றியவர்.

(a) சுப்பிரமணிய பாரதியார்
(b) திருவள்ளுவர்
(c) கம்பர்
(d) இளங்கோ அடிகள்

34. "இராமாயணத்தை" எழுதியவர்.

(a) திருவள்ளுவர்
(b) சுப்பிரமணிய பாரதியார்
(c) இளங்கோ அடிகள்
(d) கம்பர்

35. குற்றம் புரிந்தவர்.

(a) நீதிபதி
(b) குற்றவாளி
(c) நிரபராதி
(d) கடனாளி

**36 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்கு சரியான வாக்கியத்தை தெரிவு செய்க.**

**For questions 36 to 38 choose the right sentence arranged in the best way.**

36.
(a) முன்னறி தெய்வம் அன்னையும் பிதாவும்
(b) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
(c) தெய்வம் முன்னறி அன்னையும் பிதாவும்
(d) பிதாவும் தெய்வம் அன்னையும் முன்னறி

37.
(a) முகத்தில் தெரியும் அழகு அகத்தின்
(b) தெரியும் முகத்தில் அகத்தின் அழகு
(c) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
(d) அழகு தெரியும் அகத்தின் முகத்தில்

38.
(a) இளமையில் கல்வி சிலையில் எழுத்து
(b) கல்வி எழுத்து சிலையில் இளமையில்
(c) சிலையில் எழுத்து இளமையில் கல்வி
(d) எழுத்து இளமையில் கல்வி சிலையில்

**39 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 39 to 40 choose the correct word.**

39. ______________________________ பெய்ததால் குளம் நிரம்பியது.
(a) முலை
(b) மழை
(c) மளை
(d) மழலை

40. யானை மிகுந்த ______________________________ உடைய மிருகம்.

(a) பழம்
(b) பலம்
(c) பளம்
(d) பவளம்

**41 முதல் 45 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 41 to 45 choose the most appropriate answers.**

41. **மன்னன்** அரச சபையில் வீற்றிருந்தான்.

(a) கள்வன்
(b) வேந்தன்
(c) காவலன்
(d) தளபதி

42. காடு முழுவதும் **தீ** பரவியது.

(a) நெருப்பு
(b) காற்று
(c) மணம்
(d) நீர்

43. குழலி **புன்னகை புரிந்தாள்.**

(a) சிரித்தாள்
(b) அழுதாள்
(c) பயந்தாள்
(d) போர் புரிந்தாள்

44. **நூலகம்** எரிந்தது.

(a) பேனைகள் வைக்கப்படும் இடம்
(b) புத்தகங்கள் வைக்கப்படும் இடம்
(c) கடிதங்கள் வைக்கப்படும் இடம்
(d) பத்திரங்கள் வைக்கப்படும் இடம்

45. **வைகறைத்** துயில் எழு.

(a) அந்தி நேரம்
(b) அதிகாலை நேரம்
(c) மாலை நேரம்
(d) இரவு நேரம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**46 முதல் 50 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் பாட்டை வாசித்து விடை எழுதுக.**

**Read the following poem and answer the questions 46 to 50.**

i)
பொய் சொல்லக் கூடாது பாப்பா – என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்கு துணை பாப்பா – ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!

ii)
பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ளல் ஆகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா – அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

iii)
சோம்பல் மிகக்கெடுதி பாப்பா – தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!
தேம்பி அழுங்குழந்தை – நீ
திடங்கொண்டு போராடு பாப்பா!
- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

46. மேற்கூறிய பாடலை எமக்கு தந்தவர்.

(a) பாரதிதாசன்
(b) இளங்கோ அடிகள்
(c) சுப்பிரமணிய பாரதியார்
(d) கம்பன்

47. யார் நமக்கு துணையாக இருப்பார் என்று கவிஞர் கூறுகின்றார்.

(a) அம்மா
(b) பெற்றோர்
(c) தெய்வம்
(d) ஆசிரியர்

48. நாம் தவிர்க்க வேண்டிய இரு குணங்கள்.

(a) பொய்சொல்லக் கூடாது, புறஞ்சொல்லல் ஆகாது.
(b) மெய் சொல்லக் கூடாது.
(c) நேர்மையாக நடக்கக் கூடாது.
(d) மற்றவர்களை பற்றி கூடாமல் கதைக்க வேண்டும்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

49. இப்பாடலில் இருந்து நாம் விளங்கிக் கொள்வது.

(a) தீயவர்களைக் கண்டு நாம் விலக வேண்டும்.
(b) தீயவர்களைக் கண்டால் பயப்படவேண்டும்.
(c) தீயவர்களோடு சேர்ந்து நடக்கவேண்டும்.
(d) தீயவர்களைக் கண்டு அச்சங் கொள்ளக்கூடாது.

50. நாம் யாருடைய சொல்லைத் தட்டக்கூடாது என்று கூறுகின்றார் கவிஞர்.

(a) அக்காவின் சொல்லை
(b) அம்மாவின் சொல்லை
(c) அண்ணாவின் சொல்லை
(d) பாட்டியின் சொல்லை